ஒவ்வொருவருக்கும் வரிசையாக பேபர்கள் போகாமல் அந்தந்த ஸப்ஜெக்ட்டுக்கு தகுந்தாற்போல் நேராக எடுத்த எடுப்பிலேயே அப்பர் டிவிஷன் கிளார்க் அல்லது சூபரிண்டெண்டெண்ட் அல்லது அண்டர் செகரடரி பார்த்து மேலே செகரடரிக்கும் மந்திரிக்கும் பேபர்களை சர்குலேட் செய்வது என்ற முறைதான் 'லெவல் ஜம்பிங்' என்பது. இம்மாதிரி ஒவ்வொருவருக்கும் தொடர்ச்சியாக பேபர் போகாமல், இரண்டு, மூன்று இடம் தாண்டிப் போவது தான் 'லெவல் ஜம்பிங்' என்பது. (ஸ்ரீ எம். கலியாணசுந்தரம்: படிப்படியாக போகாமல் ஒன்று அல்லது இரண்டுபடி தாண்டிப் போவது.) படி தாண்டுவது என்று சொன்னால் அது 'ஹை ஜம்ப்' ஆகிவிடும். ஆகவே நான் சொன்னபடி ஒவ்வொரு இடமாக வரிசையாக போகாமல் ஒன்று, இரண்டு இடம் விட்டு போவதென்ற 'லெவல் ஜம்பிங்' முறை இப்பொழுது ஓரளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதை இன்னும் நல்ல முறையிலே திருத்தி அமைப்பதற்கு இடம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

Bridge (Erode–Karur Road)

* 159 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை ஜில்லாவில் ஈரோட்டிலிருந்து கரூர் போகும் பாட்டையில் (ரோடு) 21/1 மைலில் உள்ள அமுங்கு பாலத்தை பெரிய பாலமாக மாற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) அதற்காகும் உத்தேச செலவின் மதிப்பென்ன?

(உ) எப்பொழுது அவ்வேலை ஆரம்பமாகும்?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The proposal to construct a high level bridge instead of a causeway at the site is under the technical examination of the officers of the Highways Department.

(*b*) The cost of bridge is estimated at Rs. 4,15,000.

(*c*) The work is likely to be taken up during the next year (1961-62).

Meeting at Periamet, Madras

* 160 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. Minister for Home be pleased to state whether it is a fact that the Deputy Commissioner of Law and Order addressed a meeting at Periamet, Madras, in December 1959 which was presided over by a thrice convicted bad character who was in the Police list of rowdies?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that a hand-bill was printed and published by this bad character stating that he would preside over the meeting which would be addressed

by the Deputy Commissioner of Law and Order? If this was wrong information why was not action taken against the bad character?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: This person did not preside over the meeting. He attended the meeting. The hand-bill was printed so that he could prove his respectability at the trial which was held.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware of the fact that this bad character is taking undue advantage of his friendship with the Deputy Commissioner of Law and Order and persecuting the merchants and hand-cart pullers in Periamet?

THE HON SRI M BHAKTAVATSALAM: I totally deny there is any friendship between the Deputy Commissioner of Law and Order and the bad character.

Mr. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III.—CALLING ATTENTION TO THE WHOLESALE EVICTION OF TENANTS IN THANJAVUR DISTRTCT.

Mr. SPEAKER: I have received notice under Rule 41 from the hon. Members Sri C. Muthiah and Sri T. R. Ramamirtha Thondaman calling attention of the Hon. the Minister for Revenue to a matter of urgent public importance viz., the wholesale eviction of tenants in all towns in Thanjavur district.

The hon. Member Sri C. Muthiah will briefly state his case.

SRI C. MUTHIAH: கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சை ஜில்லாவிலே சில முனிசிபல் நகரங்களிலே இந்தக் குடியிருப்புப் பாதுகாப்புச் சட்டம் இருந்துகொண்டு வருகிறது. சில மாதங்களுக்கு முன்பு சட்டசபையிலே தொழில் நடத்தும் ஸ்தாபனங்களுக்கு மாத்திரம் அந்த சட்டம் அமுலாகாது என்கிற திருத்தம் வந்த பிறகு, இப்பொழுது தஞ்சை, கும்பகோணம் போன்ற இடங்களில் கடைகள் இருக்கிற இடங்களை காலிசெய்யும்படியான நிர்ப்பந்தம் இப்பொழுது ஏற்பட்டு சில இடங்களில் காலி செய்து கொண்டு வருகிறார்கள். மேஜர் பஞ்சாயத்துக்களாகிய சீர்காழி, திருவாரூர் ஆகிய இடங்களில் குடியிருப்பு பாதுகாப்பு சட்டம் இல்லாத காரணத்தினால், இப்பொழுது பூமியினுடைய விலை ஏற்றத்தினால் ஆறு மாத காலத்தில் எல்லோரும் அந்த நகரங்களில் உள்ள பகுதிகளை விற்று வருகிறார்கள். அதனால் டவுன்புறங்களில் வெளியேற்றும்படியான சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது. சென்ற மாதம் சீர்காழியில் ஒன்பது பேர்கள் கோர்ட்டில் கேஸ் நடத்தி வெளியேற்றியிருக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இப்பொழுது